

### பசார் போரோங்கில் அதிரடிச் சோதனை

# அந்நியப் பிரஜைகளின் கடைகள் அப்புறப்படுத்தப்பட்டன

கோலாலம்பூர், ஜூன் 12-

கோலாலம்பூர், பசார் போரோங் பகுதியில் வியாபாரம் மேற்கொண்டு வந்த அந்நிய பிரஜைகளுக்கு சொந்தமான பொருட்களை கோலாலம்பூர் மாநகர் மன்றத் தரப்பு (டிபிகேஎல்) பறிமுதல் செய்தது.

நேற்றுமுன்தினம் பசார் போரோங் சுற்றுவட்டாரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அந்நியப் பிரஜைகளுக்கு எதிரான அதிரடிச் சோதனையின் அடிப்படையில் 2016 (கூட்டரசுப் பிரதேச கோலாலம்பூர்) வியாபாரம் உரிமம் கடைநிலை சட்டத்தின் அடிப்படையில் இந்த பறிமுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

முன்னதாக சுற்றுச்சூழல் இலாகா, சுகாதார இலாகாவின் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்பட்ட இந்த அதிரடிச் சோதனையில் புசாட் பண்டார் உத்தாரா ஜாலான் 2/3ஏ பகுதியில் பொது இடத்தில் தடையாக அமைக்கப்பட்டிருந்த கடைகளையும் கோலாலம்பூர் மாநகர் மன்றத் தரப்பு அப்புறப்படுத்தியது.

பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தும் அடுத்தகட்ட நடவடிக்கைக்காக செராஸ், தாமான் மிஹராஜாவில் உள்ள கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.